## VELLORE & TIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

**29.03.2023** காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் 60-ம் ஆண்டின் டைமண்ட் ஜூபிலி விழா திருச்சி TMSSS அரங்கில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் VSSS இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக், பணியாளர் திரு. S.சவரிநாதன், TVMSSS திட்ட அலுவலர் திரு. L.தாமஸ் இன்பசேகர் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

டைமண்ட் ஜூபிலி நினைவாக 60 புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சத்துணவு அடங்கிய பை வழங்கப்பட்டது. மேலும் பல ஆண்டுகளாக தமிழ்நாடு சமூகப்பணி மையங்களில் பணிபுரிந்துவருகின்ற பணியாளர்களுக்கு சிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டது. நமது மறைமாவட்டத்தில் 50 ஆண்டுகளாக பணிபுரிகின்ற திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக் அவர்களுக்கு சான்றிதழும் பொன்னாடையும் முன்னாள் கோட்டார் ஆயர் அவர்கள் வழங்கி பாராட்டினார். மற்றும் VSSS பணியாளர் திரு. S.சவரிநாதன் 25 ஆண்டுகள் பணிபுரிவதால் சான்றிதழ் வழங்கப்பட்டது.

25 ஆண்டுக்கும் மேல் பணிபுரியும் பணியாளர்கள் திரு. A.இராசு லூயில், திருமதி. P.S. செலின், திருமதி. D.இளமதி, திருமதி. E.காணிக்கைமேரி, TVMSSS திட்ட அலுவலர், திரு. L.தாமஸ் இன்பசேகர் ஆகியோருக்கும் VSSS சான்றிதழ் இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்கள் வழியாக வழங்கப்பட்டது.

03.04.2023 : அக்சீலியம் கல்லூரியில் MSW பயிலும் மாணவியர்கள் அருட்சகோதரி R.பவுலா, செல்வி. M.சந்தியா, செல்வி. M.ஸ்டெபி இவர்கள் கடந்த மூன்று மாதங்களாக VSSS மையத்தில் களப்பணியும், சமூகப்பணியாளர்களுக்கான பயிற்சியும் பெற்றுவந்தார்கள். இதற்கான மதிப்பீடு VSSS அலுவலகத்தில் இயக்குநர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பான பயிற்சி

பெற்றதாகவும் VSSS-ன் பணிகள் சிறப்புள்ளதாக இருப்பதாகவும், பல கள அனுபவங்கள், சமூகப்பணிக்கான தெளிவான செய்முறைகள், இனம் கண்டு பணியாற்றும் அணுகுமுறை, முன்னேற்றத்தின் வழிவகைகள், திட்டவரைவு தயாரித்தல், மதிப்பீடு செய்தல், நிலைத்தடி நீடித்ததன்மையை உருவாக்குதல், விளையாட்டுமுறை பயிற்சிகள், மக்களோடு இணைந்து பணிபுரிகின்றவை போன்ற பயிற்சிகள் மிகச்சிறப்பாக கற்பிக்கப்பட்டது என்றும், VSSS இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்களின் வழிகாட்டுதல், தினசரி என்ன கற்றுக்கொண்டோம் என்பதை ஆர்வமுடன் அறிந்து தொடர் செயல்பாட்டிற்கு வழிவகுத்தார். திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக் திரு. A.இராசு லூயிஸ், திருமதி. P.S.செலின் ஆகியோர் சமூகப்பணிக்கான பயிற்சியை திறம்பட அளித்தார்கள். இறைவன் அளித்த இந்த வாய்ப்பிற்கு நன்றி சொன்னார்கள்.

21.03.2023 : VSSS இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்களின் 22ம் ஆண்டு குருத்துவ அருட்பொழிவு துவக்கவிழா மிகச்சிறப்பாக பணியாளர்களால் சிறப்பிக்கப்பட்டது. பேரருட்திரு. S.ஜேம்ஸ் அவர்கள் தலைமையில் CPC இயக்குநர் அருள்முனைவர் L.ரமேஷ் அந்தோணி, சேண்பாக்கம் பங்குத்தந்தை அருட்திரு. A.தேவசகாயம் ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினார்கள். பிறகு நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக் அவர்கள் அனைவரையும் வரவேற்று, இயக்குநர் தந்தையின் பணிகளையும் அதன் நடைமுறைகளையும் சிறப்பாக எடுத்துக் கூறினார். அருள்முனைவர் L.ரமேஷ் அந்தோணி அவர்களின் வாழ்த்துரையில் குருத்துவத்தின் மேன்மை, நற்கருணை பக்தி, குருக்களை வழிநடத்துவது ஆகியவற்றில் சிறந்து விளங்கும் இயக்குநர் தந்தை பல்லாண்டு வாழ வாழ்த்தினார். அருட்தந்தை A.தேவசகாயம் அவர்கள் தந்தை அவர்கள் சமுதாயத்திற்கு ஆற்றுகின்ற சமய சமூகப்பணி, பல ஏழை மக்களுக்கு உதவிகரமாக இருப்பது, ஓர் எடுத்துக்காட்டான தந்தையாக இருக்கிறார் என்று வாழ்த்தினார், கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. K.யேசுகுமார் தனது வாழ்த்துமடலில் ஆரம்ப நிலையிலிருந்து இன்றுவரையில்

தந்தையின் அருட்பணிகளை கவிதையாக தொகுத்து வழங்கினார். VSSS பணியாளர்கள் சார்பாக தந்தை அவர்களுக்கு கேடயமும், பொன்னாடையும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. TVMSS சார்பாக திட்ட அலுவலர் திரு. L.தாமஸ் இன்பசேகர் அவர்கள் தந்தை அவர்களை வாழ்த்தி கேடயம் வழங்கினார். மேல்புதுப்பாக்கம் “உறவுகள் கலைக்குழு” சார்பாக திரு. அந்திரியாஸ் அவர்கள் தலைமையில் பொம்மலாட்டம், பறைஇசை நடன நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இறுதியில் இயக்குநர் தந்தை அவர்கள் ஏற்புரையில் தனக்கு தேவ அழைத்தல் எப்படி கிடைத்தது என்றும், அதில் பணியாற்றுவதற்கு இறைவனுக்கு நன்றியும், இப்பணி சிறப்பாக செய்ய தான் ஆற்றிய பணித்தளங்களில் உள்ள ஒவ்வொரு மக்களும், உடன் குருக்கள், தற்போது VSSS பணியாளர்கள் இவர்களின் ஒத்துழைப்போடு மிகச்சிறப்பான பணியை செய்ய முடிந்தது என்றும், ஆயரின் செயலாளராக இருந்தபோது சி.எம்.சி. மருத்துவமனையில் உள்ள சில நோயாளிகளுக்கு தினசரி திருப்பலி நிறைவேற்றி வந்ததாகவும், நீண்ட நாட்களாக குடல்வால் நோயால் பாதிக்கப்பட்ட 14 வயது சிறுமி தினசரி நற்கருணை பெற்றுக்கொண்டதால், நற்கருணையால் குணமடைந்ததை கண்கூடாக உணர்ந்தேன் என்றும், மருத்துவர்கள் வியப்படைந்தனர் என்றும், அன்று முதல் என்னுடைய நற்கருணை பக்தி அதிகரித்து இன்றுவரை அதை தொடர்ந்து செய்கிறேன் என்றும் சாட்சியம் பகிர்ந்தார். மேலும் இவ்விழாவில் கலந்துக்கொண்ட குருக்கள், பணியாளர்கள், மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள், MSW மாணவ மாணவியர்கள், கலைக்குழுவினர் மற்றும் கலந்துக்கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். இந்த நாளின் நினைவாக 5 புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 15 பொருட்கள் அடங்கிய சத்துணவு பொருட்கள், புடவை வழங்கப்பட்டது. VSSS கணக்காளர் திரு. A.இராசு லூயிஸ் அவர்கள் நன்றி கூறினார். விழா விருந்தோடு நிகழ்ச்சி நிறைவுப்பெற்றது.

## HUNGER AND DISEASE FUND COLLECTION – 2023

| S.NO. | PARISHES | AMOUNT [RS.] |
|---|---|---|
| 1 | Thenimalai | 3,500 |
| 2 | Cheyyar | 8,500 |
| 3 | Old Town (Cheque) | 12,500 |
| 4 | Kaniyambadi | 9,800 |
| 5 | Pulavanpadi | 1,500 |
| 6 | Perumanam | 6,500 |
| 7 | Anthoniyar Nagar, Udayarkuppam | 6,500 |
| 8 | A.Kattupadi | 5,906 |
| 9 | Santhavasal | 2,290 |
| 10 | Thanipadi | 7,500 |
| 11 | Sathuvachary | 10,000 |
| 12 | Madurampattu | 2,500 |
| 13 | Gandhi Nagar | 27,560 |
| 14 | Christianpet | 6,000 |
| 15 | Pallalakuppam | 3,650 |
| 16 | Mazhuvankarunai | 6,000 |
| 17 | Pulivanandal | 1,230 |
| 18 | Bagayam | 35,100 |
| 19 | Tiruvannamalai | 35,000 |
| 20 | Somasipadi | 1,000 |
| 21 | Vettavalam | 2,500 |
| 22 | Zamin Gudalore | 5,000 |
| 23 | St. Anne’s Convent, Christianpet | 5,000 |
| 24 | Udayendiram | 3,500 |
| 25 | Pallikonda | 2,410 |
| 26 | Arakonam | 15,270 |
| 27 | Thachampadi | 31,350 |
| 28 | Perunthuraipet | 3,500 |
| 29 | Vandavasi | 20,000 |

குறிப்பு :

பசிப்பிணி போக்கும் திட்டத்திற்கு பங்கு தந்தையர்களும், இறைமக்களும் தாராளமாக நிதி வழங்கியமைக்கு நன்றியும் செபமும். பசிப்பிணி நிதி வழங்காத பங்குகள் அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

07.05.2023 : ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணி அளவில் வேலூர் ஆயர் இல்லம் ஜூபிலி கருத்தரங்கு கூடத்தில் BOBLOUISE BOURKE மாலை நேர வகுப்பு ஆசிரியர், ஆசிரியைகளுக்கான ஆண்டு கலந்தாய்வுக் கூட்டம் வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் பேரருள்தந்தை I.ஜான்ராபர்ட் அவர்கள் தலைமையிலும், VSSS & TVMSS இயக்குநர் பேரருள்தந்தை S.ஜேம்ஸ் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற இருக்கிறது.

செய்தி தொகுப்பு<br>
திரு. **A.**பேட்ரிக் &<br>
திரு. **T.**இன்பசேகர்<br>
**VSSS & TVMSSS** திட்டமேலாளர்கள்

பேரருட்திரு. **S.**ஜேம்ஸ், **MSW**<br>
இயக்குநர், **VSSS & TVMSSS**<br>
ஆயர் இல்லம், வேலூர்

## TAMILNADU PUBLIC SERVICE COMMISSION

### TNPSC GROUP I PRELIMINARY EXAM

தமிழகத்தில் மிக உயர்ந்த வேலை வாய்ப்புக்கான **TNPSC Group I** தேர்வு நடைபெற உள்ளது. இத்தேர்வு **Prelims, Mains, Interview** என்ற 3 நிலைகளில் நடைபெறும். இதில் வெற்றிப் பெறுகிறவர்கள் உயர்ந்த பதிவிகளான துணை ஆட்சியர் **(Deputy Collector)** உதவி ஆணையர் **(Assistant Commissioner of Commercial)** துணை போலிஸ் சூப்பிரண்டு **(DSP)** மாவட்ட உயர் அதிகாரிகள் **(Deputy Registrar of Co-Operative) District Employment Officer** மற்றும் மாவட்ட உயர் அதிகாரிகள் போன்ற பல்வேறு பதவிகளில் நியமிக்கப்படுவர். துணை ஆட்சியராக பதவி ஏற்பவர்களுக்கு 8 ஆண்டுகள் பணிகாலத்திற்குப்பின் **IAS** பட்டம் அளிக்கப்படும். **Collector** பதவியை பெறுவார்கள். மற்ற பதவிகளில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு

அளிக்கப்படும் மாத ஊதியம் ரூ. 56,600லிருந்து ரூ. 2,00,000 (இரண்டு லட்சம்) வரை கிடைக்கும்.

**Selection Process**

**Preliminary Exam 2 Paper - 200 Questions - 300 Marks Main Exams - General Studies Papers 3x250 Marks = 750 Interview / Records - 100**

**PRELIMINARY EXAM : Objective type Examination**

தேர்வு நாள் : 30.10.2023

நேரம் : **09.30 am to 12.30 pm**

இத்தேர்வில் பொது அறிவு, திறன் அறிவு போன்ற பாடத்திட்டங்களிலிருந்து 200 கேள்விகள் கேட்கப்படும். அதற்கு 300 மொத்த மதிப்பெண்கள் அளிக்கப்படும். தேர்வு காலம் 3 மணி நேரம்.

1. **General Studies - 175 Questions**
2. **Mental Ability : 25 Questions**

பாடத்திட்டங்கள் :

**General Science, Geography, History and Culture, Indian Polity, Indian Economy, Indian National Movement, Development Administration, Current events, Aptitude / Mental ability.**

இத்தேர்வுக்கான தயாரிப்பு :

**Group I** தேர்வு எழுதுகிறவர்கள் **Preliminary and Main Exam** சேர்த்து தயாரிப்பது நன்று பொது அறிவு, திறனறிவு பற்றி புத்தங்களை படிக்கவேண்டும். படித்தவற்றை எழுதிப்பார்ப்பது சிறந்த தயாரிப்பு ஆகும். சமச்சீர் கல்வி 6 வகுப்பிலிருந்து 12 வகுப்புவரை உள்ள புத்தகங்களை படிக்கவேண்டும். கடந்த 5 ஆண்டுகள் கேள்வித்தாள்களுக்கு பதில் எழுதிப் பார்க்க வேண்டும். மற்ற பொது

அறிவு புத்தகங்களையும் படிக்க வேண்டும். நுண்ணறிவு கணிதம் கவனமாக படிக்க வேண்டும்.

இத்தேர்வுல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் முதன்மைத் தேர்வு எழுத வேண்டும். அத்தேர்வில் வெற்றி பெறுகிறவர்களுக்கு நேர்காணல் நடத்தப்படும். இதில் வெற்றி பெறுகிறவர்களுக்கு பணி நியமனம் அளிக்கப்படும்.

**Application Mode : Online**

**Registration : July 20 to August 2023**

விபரங்களுக்கு : **www.tnpsc.gov.in**

அருள்பணி. பூபதி லூர்துசாமி
செயலர்
தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு